**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-116/2023**

**List of Witness LW1 Examined as PW1 (Complainant)**

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரா | Age: | 44 |
| Husband name | மனோகரன் | Calling: | விவசாயம் |
| Village | கல்லுப்பட்டி | Taluk | கந்தர்வக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.09.2025

( 1,2 எதிரிகள் ஆஜரில்லை. அவர்களது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

முதல் விசாரணை

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் ரமேஷ், ராஜேஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், நானும் எனது பக்கத்து வீட்டுக்காரர் அமராவதியும் எனது வீட்டில் இருந்த போது, தெருவில் சத்தம் கேட்டது. நாங்கள் என்ன என்று சென்று பார்த்த போது, எனது நாத்தனார் அம்பிகா என்பவரை எனது பக்கத்து வீட்டை சேர்ந்த ரமேஷ், ராஜேஷ் ஆகியோர் தகாத, சொல்ல முடியாத, கெட்ட கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். நாங்கள் சென்று ஏன் திட்டுகிறீர்கள் என்று கேட்ட போது, கல்லால் அம்பிகாவை அடித்து மண்டையை உடைத்தார்கள், என்னை மேற்படி இருவரும் தலைமுடியை பிடித்து இழுத்து, அடித்து போட்டு விட்டார்கள். அதனால் எனது வலது பக்க நெற்றியில் வீக்கம் ஏற்பட்டது. அம்பிகாவிற்கு மண்டை உடைந்து விட்டது, மூக்கில் அடிபட்டு இரத்தம் வந்து கொண்டிருந்தது. பின்னர் கார்த்தி மற்றும் வாசுகி இருவரும் வந்து விலக்கிவிட்டு, 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி வரவழைத்து, என்னையும் அம்பிகாவையும் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது, போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம். என். சிவபழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-116/2023**

**List of Witness LW7 Examined as PW2 (Magazar Witness)**

| | | | |
|---|---|---|---|
| Name | மனோகரன் | Age: | 56 |
| Father name | குழந்தையா | Calling: | விவசாயம் |
| Village | கல்லுப்பட்டி | Taluk | கந்தர்வக்கோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.09.2025
( 1,2 எதிரிகள் ஆஜரில்லை. அவர்களது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 21.08.2022 ஆம் தேதி, நடந்த சம்பவம் தொடர்பாக 22.08.2022 அன்று காலை 09.00 மணியளவில், கந்தர்வக்கோட்டை போலிசார் சந்திராவிற்கும் ரமேஷ், ராஜேஸ்-ற்கும் நடந்த பிரச்சினை தொடர்பாக, சம்பவ இடத்திற்கு வந்து, வரைபடம் வரைந்து, என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி** பார்வை மகஜர் **அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

**1)** அ.சா.1 எனது மனைவி என்றால் சரிதான். எங்களுக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமான பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். எதிரிகள் அளித்த புகாரின் பேரில் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து பேசி வருகிறோம் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு எந்த பெயர் கொண்ட போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் காலை 09.00 மணிக்கு வாங்கினார்கள், போலிசார் பெயர் தெரியவில்லை. பார்வை மகஜரில் உள்ள எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றால் இல்லை. அதை யார் எழுதினார்கள், என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல.

2) பார்வை மகஜரில் என்னுடன் கையொப்பம் செய்த நபரை மற்றொரு நபர் யார் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல, கார்த்திக் என்பவர் கையொப்பம் செய்தார். கார்த்திக் எனது அண்ணன் மகன் ஆவார். நான் 3 கையொப்பம் செய்து கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். எனது மனைவி கொடுத்த புகாரின் பேரில் நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரிக்கவில்லை சரியல்ல, விசாரித்தார்கள். மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். மறுநாளும் விசாரித்தார்கள், பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| **சாட்சியின் கையொப்பம்** |

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.<br><br>ஒப்பம். என். சிவபழனி,<br>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,<br>கந்தர்வகோட்டை. |